DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 70/2021

Prosecution witness for P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. முத்துலெட்சுமி | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **17.11.2025.**

A1, A2, A4, A6 are present. A5 is absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

<u>முதல்விசாரணை:-</u>

நான் பிறந்தது முதல் தூத்துக்குடி மாவட்டம், நவலெட்சுமிபுரம் நடுத்தெருவில் குடியிருந்து வருகிறேன். என் கணவர் கூலி வேலை செய்து வந்தார். அவர்தான் இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோனவர். சாட்சி பிச்சை எனது மாமா. ஜெயா அத்தை. ராஜதுரை கொளுந்தன். சுதா ராஜதுரையின் மனைவி. ஆஜர் எதிரிகளைத் தெரியும். அவர்களும் எனக்கு உறவினர். அவர்கள்தான் எனது கணவரை வெட்டி கொலை செய்தவர்கள். என் கணவர் இறப்பதற்கு முன்பாக வயக்காட்டில் விவசாய வேலை செய்து வந்தார். அந்த விவசாயத்தில் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. அதனால் என் கணவர் சிவராமமங்களம் துரையப்பா என்பவருக்குசொந்தமான செங்கல் சேம்பரில் வேலை செய்து வந்தார். ஆஜர் எதிரிகளுக்கும், என் கணவருக்கும் என்ன முன்விரோதம், என்ன பிரச்சனை என்றால் என் கணவர் இறப்பதற்கு முன்பு யேசுராஜாவையும் எதிரி அந்தோணிராஜையும் என் கணவர் வேலை செய்த துரையப்பா செங்கல் சேம்பரில் வேலைக்கு கூட்டி வந்தார். அங்கு அவர்களுக்குள் ரூ.50/— பிரச்சனையில் வாக்குவாதம் ஏற்பட்டு எனது கணவர் மாரிமுத்துவை எதிரிகள் யேசுராஜா, அந்தோணிராஜ், ஞானசேகர், குணசேகர் ஆகியோர்கள் அடித்து விட்டார்கள். அவர்கள் அடித்ததால் என் கணவர் கையிலிருந்த அரிவாளால் யேசுராஜாவை வெட்டிவிட்டார். அதற்கு பழிக்குபழியாக அவர்களும்அவர்களை சேர்ந்தவர்களும் என் வீட்டையும், என்

கொளுந்தன் வீட்டையும்அடித்து நொறுக்கி விட்டார்கள், வீட்டிலிருந்து 10 பவுன் நகையையும் எடுத்து சென்றுவிட்டார்கள். அதனால் இருவர் மேலும் மாறி மாறி வழக்குகள்பதிவு செய்து ஸ்ரீவைகுண்டம் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. அதுதான் அவர்களுக்குள்ள பகை. அந்த பிரச்சனை நடந்து ஒரு வாரம்கழித்து சந்தியாப்பர் என் வீட்டிற்கு வந்து என்னிடமும்,என் மாமியாரையும் உன் புருஷனை சத்தம் போட்டுவை, நாங்கள் பெரிய குடும்பத்தை சேர்ந்தவர்கள், உன் புருஷன் எங்களை வெட்டி அவமானப்படுத்தி விட்டான், வெளியே தலைகாட்ட முடியவில்லை. இல்லாவிட்டால் அவனை வெட்டி கொலை செய்துவிடுவோம் என்று மிரட்டினார். அதற்கு என் அத்தை என் பிள்ளையை சத்தம் போடுகிறேன் என்று சொல்லிவிட்டார். ஆனால் அவர்கள் அந்த பிரச்சனையை விடவில்லை, வஞ்சகமாக மனதில் வைத்துக்கொண்டு 29.04.2019 ஆம் தேதி இரவு 6.00 மணியளவில் நானும், என் கணவரும் என் மாமா வீட்டிற்கு சென்றுவிட்டு இரவு சுமார் 7.30 மணியளவில் நானும், எனது கணவரும், எனது அத்தை ஜெயாவும் எதிரிகள் முறைத்து கொண்டிருந்ததால் என் அத்தை எங்களுடன் வந்தார். அப்பொழுது நடுத்தெருவில் பாஸ்கர் என்பவரின் வீட்டிற்கு அருகே வந்தபோது அருள்ராஜ், அந்தோணிராஜ் என்பவர்களும் அரிவாளுடன் வந்து எனது கணவரை வழிமறித்தார்கள். அருகில் சந்தியாப்பரும் மற்ற எதிரிகளும் நின்று கொண்டிருந்தார்கள். எதிரி சந்தியாப்பன் இந்த புண்டா மவனை வெட்டிக்கொல்லுங்கள் இவன்தான் நம்மளை வெட்டி வெளியே தலைகாட்ட முடியாமல் வைத்தவன் என்று கூறியவுடன் எதிரி அருள்ராஜ் கையில் வைத்திருந்த அரிவாளால் என் கணவரின் தலையில் வெட்டவும், என் கணவர் தலையை சற்று விலகிவிடவே அந்த வெட்டு வலது காதிற்கு கீழே வெட்டுப்பட்டு ஆழமான வெட்டுக்காயம் ஏற்பட்டது. எதிரி அந்தோணிராஜ் வைத்திருந்த கோழிவால் அரிவாளால் எனது கணவரின் தாடையில் வெட்டியபோது தாடைக்கு கீழ் பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டது. எனது கணவர் பயந்து உயிர்பயத்தில் ஓடியபோது எதிரி ஞானசேகர், குணசேகர், சந்தியப்பர், மரியசெல்வம்ஆகியோர் கீழே பிடித்து தள்ளியதில் என் கணவர் இரத்தவெள்ளத்தில் இறந்துவிட்டார். நானும்,எனது மாமியாரும் எனது மாமனாரும் அருகில் இருந்த ஞானசெல்வி, லிங்கேஷ்வரன், சரவணன் ஆகியோர்கள் என் புருஷனை வெட்டாதீகள்,வெட்டாதீர்கள் என்று சத்தம் போடவும், எல்லோரும் எங்களை இதே மாதிரி பகைத்து கொண்டால் உங்களுக்கும் இதே நிலைமைதான் என்று சொல்லிவிட்டு கிழக்குபார்த்து சென்றுவிட்டார்கள். அதன்பிறகு நானும், எனது மாமா பிச்சையும் அந்தஇடத்திற்கு சம்பவம் தெரிந்து வந்த என்கொளுந்தன் ராஜதுரை

ஆகியோர்களும் சேர்ந்து ஆழ்வார்திருநகரி காவல்நிலையம் சென்று நடந்த சம்பவத்திற்கு புகார்மனு கொடுத்தேன். அந்த புகார்மனுவை நான் சொல்ல சொல்ல என் கொளுந்தன் ராஜதுரை எழுதினார். அதில் எனது மாமா பிச்சை அறிவேன் சாட்சியாக கையெழுத்து செய்து கொடுத்தார். அதற்கான புகார்மனு நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ 1** ஆகும். என் கணவர் சம்பவத்தின்போது சந்தனகலர் முழுக்கை சட்டையும், வெள்ளை கலர் புளு கலர்கட்டம்போட்ட சாரமும் அணிந்திருந்தார், அவைகளிலும் இரத்தக்கறை படிந்ததிருந்தது. எதிரிகள் சம்பவத்தின்போது வைத்திருந்த அரிவாளை நீதிமன்றத்தில் காண்பித்தால் அடையாளம் காட்ட முடியும். அதில் வெட்டருவாளை அருள்ராஜ் என்பவரும், அந்தோணிராஜ் கோழிவால் அரிவாள் வைத்திருந்தார். மேற்படி சான்றுபொருட்கள் ஸ்ரீவைகுண்டம் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தவை திடீர் வெள்ளத்தில் சேதமடைந்துவிட்டதால் நீதிமன்றத்தில் காண்பிக்க முடியவில்லை. இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிகளில் குணசிங் இன்று ஆஜராகவில்லை, மற்றொரு எதிரி சிலுவை என்பவர் இறந்துபோய்விட்டார். நான் புகாரில் இறந்துபோன மரியசிலுவை என்பதற்கு பதிலாக சிலுவை என்று கொடுத்திருந்தேன். அதன்பிறகு சம்பவ இடத்திற்கு வந்து என் கணவரின் உடலை அடையாளம் காட்டினோம். இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்குவிசாரணை நீதிமன்ற நேரமின்மை காரணமாக குறுக்குவிசாரணை defer செய்யப்படுகிறது</u>.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 70/2021

Prosecution witness for P.W.2

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. பிச்சை** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **17.11.2025.**

A1, A2, A4, A6 are present. A5 is absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

முதல்விசாரணை:-

நான் கடந்த 40 வருடங்களாக துாத்துக்குடி மாவட்டம், நவலெட்சுமிபுரம் நடுத்தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன மாரிமுத்து என்னுடைய முதல் மகன். அ.சா.1 முத்துலெட்சுமி எனது மருமகள், கொலையுண்டு இறந்துபோன மாரிமுத்துவின் மனைவி. சாட்சிகள் ஜெயா எனது மனைவி. ராஜதுரை இளைய மகன். சுதா ராஜதுரையின் மனைவி. ஆஜர் எதிரிகளைத் தெரியும். அவர்களும் எனக்கு உறவினர். அவர்கள்தான் எனது மகனை வெட்டி கொலை செய்தவர்கள். என் மகன் இறப்பதற்கு முன்பாக வயக்காட்டில் விவசாய வேலை செய்து வந்தார். அந்த விவசாயத்தில் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. அதனால் என் மகன் சிவராமமங்களம் துரையப்பா என்பவருக்கு சொந்தமான செங்கல் சேம்பரில் வேலை செய்து வந்தார். ஆஜர் எதிரிகளுக்கும், என் மகனுக்கும் என்ன முன்விரோதம், என்ன பிரச்சனை என்றால் என் மகன் இறப்பதற்கு முன்பு யேசுராஜாவையும் எதிரி அந்தோணிராஜையும் என் மகன் வேலை செய்த துரையப்பா செங்கல் சேம்பரில் வேலைக்கு கூட்டி வந்தார். அங்கு அவர்களுக்குள் ரூ.50/– பிரச்சனையில் வாக்குவாதம் ஏற்பட்டு எனது மகன் மாரிமுத்துவை எதிரிகள் யேசுராஜா, அந்தோணிராஜ், ஞானசேகர், குணசேகர் ஆகியோர்கள் அடித்து விட்டார்கள். அவர்கள் அடித்ததால் என் மகன் கையிலிருந்த அரிவாளால் யேசுராஜாவை

வெட்டிவிட்டார். அதற்கு சும்மாயிருந்த என்னையும், எனது இளைய மகனையும் கேஸில் சேர்த்துவிட்டார்கள். அந்த பிரச்சனை நடந்து ஒரு வாரம்கழித்து சந்தியாப்பர் என் வீட்டிற்கு வந்து என்னிடமும்,என் மனைவியையும், என் மருமகளிடம் உன் புருஷனை சத்தம் போட்டுவை, நாங்கள் பெரிய குடும்பத்தை சேர்ந்தவர்கள், உன் புருஷன் எங்களை வெட்டி அவமானப்படுத்தி விட்டான், வெளியே தலைகாட்ட முடியவில்லை. இல்லாவிட்டால் அவனை வெட்டி கொலை செய்துவிடுவோம் உங்களுக்கும் அதே நிலைமைதான் என்று மிரட்டினார். அதற்கு என் மனைவி என் பிள்ளையை சத்தம் போடுகிறேன் என்று சொல்லிவிட்டார். ஆனால் அவர்கள் அந்த பிரச்சனையை விடவில்லை, வஞ்சகமாக மனதில் வைத்துக்கொண்டு கடந்த 6 வருடங்களுக்கு முன்னர் ஒருநாள் என் மகன் மாரிமுத்துவும், என் மருமகளும் என் வீட்டிற்கு வந்தார்கள், வந்தவர்கள் என் வீட்டில் சுமார் 7.00 மணி வரை இருந்தார்கள். பின்னர் என் மனைவி, என் மகன் மாரிமுத்து, எனது மருமகள் ஆகியோர்கள் வீட்டிற்கு செல்வதாக சொல்லிவிட்டு, இரவு சுமார் 7.30 மணியளவில் அப்பொழுது நடுத்தெருவில் பாஸ்கர் என்பவரின் வீட்டிற்கு அருகே வந்தபோது அருள்ராஜ், அந்தோணிராஜ் என்பவர்களும் அரிவாளுடன் மற்ற எதிரிகளும் வந்து என் மகனை வழிமறித்தார்கள். எதிரி சந்தியாப்பன் இந்த புண்டா மவனை வெட்டிக்கொல்லுங்கள் இவன்தான் நம்மளை வெட்டி வெளியே தலைகாட்ட முடியாமல் வைத்தவன் என்று கூறியவுடன் எதிரி அருள்ராஜ் கையில் வைத்திருந்த அரிவாளால் என் மகனின் தலையில் வெட்டவும், அது வழுவி அந்த வெட்டு வலது காதிற்கு கீழே வெட்டுப்பட்டு ஆழமான வெட்டுக்காயம் ஏற்பட்டது. எதிரி அந்தோணிராஜ் வைத்திருந்த கோழிவால் அரிவாளால் எனது மகனின் தாடையில் வெட்டியபோது தாடைக்கு கீழ் பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டது. எனது பிள்ளை பயந்து உயிர்பயத்தில் ஓடியபோது எதிரி ஞானசேகர், குணசேகர், சந்தியப்பர், மரியசெல்வம் ஆகியோர் கீழே பிடித்து குப்புற தள்ளியதில் என் மகன் இரத்தவெள்ளத்தில் இறந்துவிட்டார். அருகில் பாஸ்கர் மருமக்கள்மார்களும், லிங்கேஷ்வரியும் இருந்தார்கள். நானும், எனது மனைவியும், எனது மருமகளும் அருகில் இருந்த லிங்கேஷ்வரன் ஆகியோர்கள் என் மகனை வெட்டாதீகள்,வெட்டாதீர்கள் என்று சத்தம் போடவும், எல்லோரும் எங்களை இதே மாதிரி பகைத்து கொண்டால் உங்களுக்கும் இதே நிலைமைதான் என்று சொல்லிவிட்டு கிழக்குபார்த்து சென்றுவிட்டார்கள். அதன்பிறகு நானும், எனது மருமகளும் அந்தஇடத்திற்கு சம்பவம் தெரிந்து வந்த என் இளையமகன் ராஜதுரை ஆகியோர்களும் சேர்ந்து ஆழ்வார்திருநகரி காவல்நிலையம் சென்று நடந்த சம்பவத்திற்கு புகார்மனு கொடுத்தோம். அந்த புகார்மனுவை என் மருமகள் சொல்ல சொல்ல என்

இளையமகன் ராஜதுரை எழுதினார். அதில் நான் அறிவேன் சாட்சியாக கையெழுத்து செய்து கொடுத்தேன். அதற்கான அ.சா.ஆ–1 புகார்மனுவில் உள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடையதுதான் அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ–2** ஆகும். என் மகன் சம்பவத்தின்போது சந்தனகலர் முழுக்கை சட்டையும், வெள்ளை கலர் புளூ கலர்கட்டம்போட்ட சாரமும் அணிந்திருந்தார், அவைகளிலும் இரத்தக்கறை படிந்திருந்தது. எதிரிகள் சம்பவத்தின்போது வைத்திருந்த அரிவாளை நீதிமன்றத்தில் காண்பித்தால் அடையாளம் காட்ட முடியும். அதில் வெட்டருவாளை அருள்ராஜ் என்பவரும், அந்தோணிராஜ் கோழிவால் அரிவாள் வைத்திருந்தார். மேற்படி சான்றுபொருட்கள் ஸ்ரீவைகுண்டம் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தவை திடீர் வெள்ளத்தில் சேதமடைந்துவிட்டதால் நீதிமன்றத்தில் காண்பிக்க முடியவில்லை. இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிகளில் குணசிங் இன்று ஆஜராகவில்லை, மற்றொரு எதிரி சிலுவை என்பவர் இறந்துபோய்விட்டார். அதன்பிறகு சம்பவ இடத்திற்கு வந்து என் மகனின் உடலை அடையாளம் காட்டினோம். இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்குவிசாரணை நீதிமன்ற நேரமின்மை காரணமாக குறுக்குவிசாரணைdefer செய்யப்படுகிறது</u>.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 70/2021

Prosecution witness for P.W.3

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. ஜெயா | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **17.11.2025.**

A1, A2, A4, A6 are present. A5 is absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

<u>முதல்விசாரணை:-</u>

நான் கடந்த 40 வருடங்களாக தூத்துக்குடி மாவட்டம், நவலெட்சுமிபுரம் நடுத்தெருவில் குடியிருந்து வருகிறேன். என் கணவர் கூலி வேலை செய்து வருகிறார். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன மாரிமுத்து என்னுடைய தலை மகன். அ.சா.1 முத்துலெட்சுமி எனது மருமகள், கொலையுண்டு இறந்துபோன மாரிமுத்துவின் மனைவி. சாட்சி ராஜதுரை இளைய மகன். சுதா ராஜதுரையின் மனைவி. ஆஜர் எதிரிகளைத் தெரியும். அவர்களும் எனக்கு உறவினர். 1ம் எதிரி அருள்ராஜ், 2ம் எதிரி அந்தோணிராஜ் எனது கொளுந்தன் மகன்கள். எதிரி ஞானசேகர் அண்ணன் மகன், சந்தியப்பர் என் கொளுந்தன் ஆவார். எதிரி குணசேகர் எனது மருமகன். மரிய சிலுவை வழக்கு நடப்பதற்கு முன்பு இறந்துபோய்விட்டார். அவர்கள்தான் எனது மகனை வெட்டி கொலை செய்தவர்கள். என் மகன் இறப்பதற்கு முன்பாக வயக்காட்டில் விவசாய வேலை செய்து வந்தார். அந்த விவசாயத்தில் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. அதனால் என் மகன் சிவராமமங்களம் துரையப்பா என்பவருக்கு சொந்தமான செங்கல் சேம்பரில் வேலை செய்து வந்தார். ஆஜர் எதிரிகளுக்கும், என் மகனுக்கும் என்ன முன்விரோதம், என்ன பிரச்சனை என்றால் என் மகன் இறப்பதற்கு முன்பு யேசுராஜாவையும் எதிரி அந்தோணிராஜையும் என் மகன் வேலை செய்த துரையப்பா செங்கல் சேம்பரில் வேலைக்கு கூட்டி சென்றார். அங்கு அவர்களுக்குள் ரூ.50/– பிரச்சனையில் வாக்குவாதம் ஏற்பட்டு எனது மகன்

மாரிமுத்துவை எதிரிகள் யேசுராஜா, அந்தோணிராஜ், ஞானசேகர், குணசேகர் ஆகியோர்கள் அடித்து விட்டார்கள். அவர்கள் அடித்ததால் என் மகன் கையிலிருந்த அரிவாளால் யேசுராஜாவை வெட்டிவிட்டார். அதற்கு சும்மாயிருந்த என்னையும், எனது இளைய மகனையும் கேஸில் சேர்த்துவிட்டார்கள். அந்த பிரச்சனை நடந்து அன்றையதினம் சாயங்காலம் எதிரிகள் எல்லோரும் என் வீட்டிற்கும், என் இளைய மகன் வீட்டிற்கும் வந்து வீட்டையும் பொருட்களையும் சேதப்படுத்தி 10 பவுன் நகையை எடுத்துசென்றுவிட்டார்கள். இதுசம்மந்தமாக இருவர்கள் மீதும் வழக்கு பதிவு செய்து அந்த வழக்குகள் ஸ்ரீவைகுண்டம் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது. அதன்பிறகு சில நாள் கழித்து சந்தியாப்பர் என் வீட்டிற்கு வந்து என்னிடமும், என் மருமகளிடமும் உன் மகனை சத்தம் போட்டுவை, நாங்கள் பெரிய குடும்பத்தை சேர்ந்தவர்கள், எங்களை வெட்டி அவமானப்படுத்தி விட்டான், வெளியே தலைகாட்ட முடியவில்லை. இல்லாவிட்டால் அவனை வெட்டி கொலை செய்துவிடுவோம் உங்களுக்கும் அதே நிலைமைதான் என்று மிரட்டினார். அதற்கு நான் என் பிள்ளையை சத்தம் போடுகிறேன் என்று சொல்லிவிட்டேன், ஆனால் அவர்கள் அந்த பிரச்சனையை விடவில்லை, வஞ்சகமாக மனதில் வைத்துக்கொண்டு கடந்த 6 வருடங்களுக்கு முன்னர் சித்திரை மாதம் 16 ஆம் தேதி என் மகன் மாரிமுத்துவும், என் மருமகளும் என் வீட்டிற்கு வந்தார்கள், சுமார் 6.00 மணிக்கு வந்தவர்கள் என் வீட்டில் சுமார் 7.00 மணி வரை இருந்தார்கள். அதன்பின்னர் நான், என் மகன் மாரிமுத்து, எனது மருமகள் முத்துலெட்சுமி ஆகியோர்கள் வீட்டிற்கு செல்வதாக சொல்லிவிட்டு, இரவு சுமார் 7.30 மணியளவில் அப்பொழுது நடுத்தெருவில் பாஸ்கர் என்பவரின் வீட்டிற்கு அருகே வந்தபோது ஆஜர் எதிரிகளும் மற்ற எதிரியும் சேர்த்து 6 பேரும் அரிவாளுடன் மற்ற எதிரிகளும் வந்து என் மகனை வழிமறித்தார்கள். எதிரி சந்தியாப்பன் இந்த புண்டா மவனை வெட்டிக்கொல்லுங்கள் இவன்தான் நம்மளை வெட்டி வெளியே தலைகாட்ட முடியாமல் வைத்தவன் என்று கூறியவுடன் எதிரி அருள்ராஜ் கையில் வைத்திருந்த அரிவாளால் என் மகனின் தலையில் வெட்டவும், என் மகன் தலையை சாய்க்கவும், அந்த வெட்டு எனது மகன் மாரிமுத்துவின் வலது காதிற்கு கீழே வெட்டுப்பட்டு ஆழமான வெட்டுக்காயம் ஏற்பட்டது. எதிரி அந்தோணிராஜ் வைத்திருந்த கோழிவால் அரிவாளால் எனது மகனின் தாடையில் வெட்டியபோது தாடைக்கு கீழ் பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டது. எனது பிள்ளை பயந்து உயிர்பயத்தில் ஓடியபோது எதிரி ஞானசேகர், குணசேகர், சந்தியப்பர், மரியசெல்வம் ஆகியோர் கீழே பிடித்து குப்புற தள்ளியதில் என் மகன் இரத்தவெள்ளத்தில் கீழே விழுந்து இறந்துவிட்டார். அருகில் பாஸ்கர் மருமக்கள்மார்களும், லிங்கேஷ்வரியும்

இருந்தார்கள். நானும், எனது கணவரும், எனது மருமகளும் அருகில் இருந்த லிங்கேஷ்வரன், சரவணன், ஞானசெல்வி ஆகியோர்கள் என் மகனை வெட்டாதீகள்,வெட்டாதீர்கள் என்று சத்தம் போடவும், எல்லோரும் எங்களை இதே மாதிரி பகைத்து கொண்டால் உங்களுக்கும் இதே நிலைமைதான் என்று சொல்லிவிட்டு கிழக்குபார்த்து சென்றுவிட்டார்கள். அதன்பிறகு நானும், எனது குடும்பத்தாரும் அழுது கூப்பாடுபோட்டோம். பிறகு 8.00 மணிக்கு மேல் எனது மருமகள் முத்துலெட்சுமி, எனது கணவர், அந்த இடத்திற்கு சம்பவம் தெரிந்து வந்த என் இளையமகன் ராஜதுரை ஆகியோர்களும் சேர்ந்து ஆழ்வார்திருநகரி காவல்நிலையம் சென்று நடந்த சம்பவத்திற்கு புகார்மனு கொடுக்க சென்றார்கள். அதில் எனது கணவர் அறிவேன் சாட்சியாக கையெழுத்து செய்து கொடுத்தார். புகார் கொடுத்தபின்புதான் போலீசார் வந்தார்கள். என் மகன் சம்பவத்தின்போது சந்தனகலர் முழுக்கை சட்டையும், வெள்ளை கலர் புளூ கலர்கட்டம்போட்ட சாரமும் அணிந்திருந்தார், அவைகளிலும் இரத்தக்கறை படிந்திருந்தது. எதிரிகள் சம்பவத்தின்போது வைத்திருந்த அரிவாள்களை நீதிமன்றத்தில் காண்பித்தால் அடையாளம் காட்ட முடியும். அதில் வெட்டருவாளை அருள்ராஜ் என்பவரும், அந்தோணிராஜ் கோழிவால் அரிவாள் வைத்திருந்தார். மேற்படி சான்றுபொருட்கள் ஸ்ரீவைகுண்டம் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தவை திடீர் வெள்ளத்தில் சேதமடைந்துவிட்டதால் நீதிமன்றத்தில் காண்பிக்க முடியவில்லை. இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிகளில் குணசிங் இன்று ஆஜராகவில்லை, மற்றொரு எதிரி சிலுவை என்பவர் இறந்துபோய்விட்டார். அதன்பிறகு சம்பவ இடத்திற்கு போலீசார் வந்தபோது என் மகனின் உடலை அடையாளம் காட்டினோம். இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்குவிசாரணை நீதிமன்ற நேரமின்மை காரணமாக குறுக்குவிசாரணை defer செய்யப்படுகிறது</u>.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District & Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 70/2021

Prosecution witness for P.W.4

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ராஜதுரை | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **17.11.2025.**

A1, A2, A4, A6 are present. A5 is absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

<u>முதல்விசாரணை:-</u>

நான் பிறந்தது முதல் தூத்துக்குடி மாவட்டம், நவலெட்சுமிபுரம் தெற்குத்தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன மாரிமுத்து என்னுடைய அண்ணன். அ.சா.1 முத்துலெட்சுமி எனது மதினி, கொலையுண்டு இறந்துபோன மாரிமுத்துவின் மனைவி. சாட்சி சுதா எனது மனைவி. அ.சா.2 பிச்சை எனது அப்பா, அ.சா.3 ஜெயா எனது அம்மா. ஆஜர் எதிரிகளைத் தெரியும். அவர்களும் எனக்கு உறவினர். என் அப்பாவின் தங்கையின் மகன்கள், மற்றும் சித்தப்பா மற்றும் சித்தப்பா பையன்கள், எதிரிகளில் குணசிங் மட்டும் இன்று வரவில்லை. மரியசிலுவை இவ்வழக்கிற்கு முன்பாக இறந்துவிட்டார். இவர்கள்தான் எனது அண்ணனை வெட்டி கொலை செய்தவர்கள். என் அண்ணன் இறப்பதற்கு முன்பாக வயக்காட்டில் வாழை போட்டு விவசாய வேலை செய்து வந்தார். அந்த வாழை விவசாயத்தில் புயல் அடித்து நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. அதனால் என் அண்ணன் சிவராமமங்களம் துரையப்பா என்பவருக்கு சொந்தமான செங்கல் சேம்பரில் வேலை செய்து வந்தார். ஆஜர் எதிரிகளுக்கும், என் அண்ணனுக்கும் என்ன முன்விரோதம், என்ன பிரச்சனை என்றால் என் அண்ணன் இறப்பதற்கு முன்பு எதிரி மரியசிலுவை என்பவரின் மகன் யேசுராஜாவையும் எதிரி அந்தோணிராஜையும் என் அண்ணன் வேலை செய்த துரையப்பா செங்கல் சேம்பரில் வேலைக்கு கூட்டி சென்றார். அங்கு

சம்பளத்தில் ரூ.50/– கமிஷன் அடித்துவிட்டான் என்று அவர்களுக்குள் ரூ.50/– பிரச்சனையில் வாக்குவாதம் ஏற்பட்டு எனது அண்ணன் மாரிமுத்துவை எதிரிகள் யேசுராஜா, அந்தோணிராஜ், ஞானசேகர், குணசேகர் ஆகியோர்கள் அடித்து விட்டார்கள். அவர்கள் அடித்ததால் தப்பிக்க வழியில்லாமல் என் அண்ணன் கையிலிருந்த அரிவாளால் யேசுராஜாவை வெட்டிவிட்டார். அதனால் பழிக்குப்பழியாக அந்த பிரச்சனை நடந்து அன்றையதினம் சாயங்காலம் எதிரிகள் எல்லோரும் என் வீட்டிற்கும், என் அண்ணன் கட்டிய வீட்டிற்கும் வந்து வீட்டையும் பொருட்களையும் சேதப்படுத்தி 10 பவுன் நகையை எடுத்துசென்றுவிட்டார்கள். அந்த வழக்கில் என்னையும், என் அப்பா பிச்சையையும் பொய்யாக வழக்கில் சேர்த்து விட்டார்கள். இதுசம்மந்தமாக இருவர்கள் மீதும் வழக்கு பதிவு செய்து அந்த வழக்குகள் ஸ்ரீவைகுண்டம் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது. அதன்பிறகு சில நாள் கழித்து என் அண்ணன் இறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக அதுதான் எங்கள் இருவர் குடும்பத்திற்கும் உள்ள முன்பகை ஆகும். சந்தியாப்பர், ஞானசேகர், அருள்ராஜ், குணசிங், மரியசிலுவை, ஆகியோர்கள் என்அண்ணனும், என் மதினியும், என் அம்மா வீட்டிற்கு சென்று உன் புருஷனை சத்தம் போட்டுவை, நாங்கள் பெரிய குடும்பத்தை சேர்ந்தவர்கள், எங்களை வெட்டி அவமானப்படுத்தி விட்டான், வெளியே தலைகாட்ட முடியவில்லை. இல்லாவிட்டால் அவனை வெட்டி கொலை செய்துவிடுவோம் என்று மிரட்டியுள்ளார்கள். அதை என் மதினி என் அம்மாவிடம் சொல்லவே என் அம்மா மரிய சிலுவையிடம் நான் என் பிள்ளையை சத்தம் போடுகிறேன் என்று பிரச்சனையை இதோடு விடுங்கள் என்று சொல்லியுள்ளார்கள். ஆனால் அவர்கள் அந்த பிரச்சனையை விடவில்லை, வஞ்சகமாக மனதில் வைத்துக்கொண்டு 29.04.2019 அன்று சாயங்காலம் 6.00 மணியளவில் என் அண்ணன் மாரிமுத்துவும், என் மதினி முத்துலெட்சுமியும் என் அம்மா வீட்டிற்கு வந்துள்ளார்கள். வந்தவர்கள் சுமார் 1 ½ மணிநேரம் என் அம்மா வீட்டில் இருந்துள்ளார்கள். அதன்பின்னர் சுமார் 7.30 மணியளவில் என் அண்ணன் மாரிமுத்து, எனது மதினி முத்துலெட்சுமி, என் அம்மா ஜெயா ஆகியோர்கள் என் அண்ணன் வீட்டிற்கு செல்வதாக சொல்லிவிட்டு, இரவு சுமார் 7.30 மணியளவில் அப்பொழுது நடுத்தெருவில் பாஸ்கர் என்பவரின் வீட்டிற்கு அருகே வந்தபோது ஆஜர் எதிரிகளும் மற்ற எதிரியும் சேர்த்து 6 பேரும் அரிவாளுடன் மற்ற எதிரிகளும் வந்து என் அண்ணனை வழிமறித்துள்ளார்கள். எதிரி சந்தியாப்பன் இந்த புண்டா மவனை வெட்டிக்கொல்லுங்கள் இவன்தான் நம்மளை வெட்டி வெளியே தலைகாட்ட முடியாமல் வைத்தவன் என்று கூறியவுடன் எதிரி அருள்ராஜ் கையில் வைத்திருந்த அரிவாளால் என் அண்ணனின் தலையில் வெட்டவும், என் அண்ணன் தலையை சாய்க்கவும்,

அந்த வெட்டு எனது அண்ணன் மாரிமுத்துவின் வலது காதிற்கு கீழே வெட்டுப்பட்டு ஆழமான வெட்டுக்காயம் ஏற்பட்டுள்ளது. எதிரி அந்தோணிராஜ் வைத்திருந்த கோழிவால் அரிவாளால் எனது அண்ணனின் தாடையில் வெட்டியபோது தாடைக்கு கீழ் பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டது. பக்கத்தில் இருந்த ஞானசெல்வி, லிங்கேஷ், சரவணன் ஆகியோர்கள் மாரிமுத்துவை வெட்டுகிறார்கள் என்று சத்தம் போடும்போது அந்த சத்தத்தை கேட்டு நானும், எனது மனைவியும் வீட்டிலிருந்து சம்பவ இடத்திற்கு வந்தோம். எனது அண்ணன் பயந்து உயிர்பயத்தில் ஓடியபோது எதிரி ஞானசேகர், குணசேகர், சந்தியப்பர், மரியசெல்வம் ஆகியோர் கீழே மிதித்து பிடித்து குப்புற தள்ளியதில் என் அண்ணன் இரத்தவெள்ளத்தில் கீழே விழுந்து இறந்துவிட்டார். நாங்கள் வந்து பார்க்கும் இரத்தவெள்ளத்தில் சந்து அருகே இறந்துகிடந்தார். நாங்கள் எல்லோரும் அழுதோம். அந்த இடமே போர்க்களம் போல் காணப்பட்டது. சின்னபிள்ளைகள் விளையாடி கொண்டிருந்தவர்கள் அலறி அடித்து ஓடினார்கள். எதிரிகள் அனைவரும் கிழக்கு பார்த்து ஓடிவிட்டார்கள். பிறகு சுமார் 9.00 மணிக்கு மேல் நான், எனது மதினி முத்துலெட்சுமி, எனது அப்பா பிச்சை ஆகியோர்களும் சேர்ந்து ஆழ்வார்திருநகரி காவல்நிலையம் சென்று நடந்த சம்பவத்திற்கு புகார்மனு கொடுக்க சென்றோம். அதில் எனது மதினி முத்துலெட்சுமி சொல்ல சொல்ல நான் புகார் மனு எழுதினேன். அதில் அறிவேன் சாட்சியாக என் அப்பா பிச்சை கையெழுத்து செய்து கொடுத்தார். புகார் கொடுத்தபின்புதான் போலீசார் வந்தார்கள். என் அண்ணன் சம்பவத்தின்போது சந்தனகலர் முழுக்கை சட்டையும், வெள்ளை கலர் புளூ கலர்கட்டம்போட்ட சாரமும் அணிந்திருந்தார், அவைகளிலும் இரத்தக்கறை படிந்திருந்தது. அவைகள் நீதிமன்றத்தில் காண்பித்தால் அடையாளம் காட்ட முடியும். மேற்படி சான்றுபொருட்கள் ஸ்ரீவைகுண்டம் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தவை திடீர் வெள்ளத்தில் சேதமடைந்துவிட்டதால் நீதிமன்றத்தில் காண்பிக்க முடியவில்லை. இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிகளில் குணசிங் இன்று ஆஜராகவில்லை, மற்றொரு எதிரி சிலுவை என்பவர் இறந்துபோய்விட்டார். அதன்பிறகு சம்பவ இடத்திற்கு போலீசார் வந்தபோது என் அண்ணனின் உடலை அடையாளம் காட்டினோம். இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்குவிசாரணை நீதிமன்ற நேரமின்மை காரணமாக குறுக்குவிசாரணைdefer செய்யப்படுகிறது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 70/2021

Prosecution witness for P.W.5

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திருமதி. சுதா** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **17.11.2025.**

A1, A2, A4, A6 are present. A5 is absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

<u>முதல்விசாரணை:-</u>

நான் திருமணமான நாள் முதல் தூத்துக்குடி மாவட்டம், நவலெட்சுமிபுரம் வாய்க்காங்கரைதெருவில் குடியிருந்து வருகிறேன். என் கணவர் செங்கல்மாலில் கூலி வேலை செய்து வருகிறார். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன மாரிமுத்து என்னுடைய கணவரின் அண்ணன். அ.சா.1 முத்துலெட்சுமி எனக்கு அக்கா முறை, கொலையுண்டு இறந்துபோன மாரிமுத்துவின் மனைவி. அ.சா.2 பிச்சை எனது மாமனார், அ.சா.3 ஜெயா எனது மாமியார். அ.சா.4 ராஜதுரை எனது கணவர். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அவர்களும் எனக்கு உறவினர். என் மாமா, மாமாவின் மகன்கள், மற்றும் சித்தப்பா மற்றும் சித்தப்பா பையன்கள் ஆவார், எதிரிகளில் குணசிங் மட்டும் இன்று வரவில்லை. மரியசிலுவை இவ்வழக்கிற்கு முன்பாக இறந்துவிட்டார். இவர்கள்தான் எனது மச்சான் மாரிமுத்துவை வெட்டி கொலை செய்தவர்கள். எனது மச்சான் மாரிமுத்து இறப்பதற்கு முன்பாக வயக்காட்டில் வாழை போட்டு விவசாய வேலை செய்து வந்தார். அந்த வாழை விவசாயத்தில் புயல் அடித்து நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. அதனால் எனது மச்சான் மாரிமுத்து சிவராமமங்களம் துரையப்பா என்பவருக்கு சொந்தமான செங்கல் சேம்பரில் வேலை செய்து வந்தார். ஆஜர் எதிரிகளுக்கும், எனது மச்சான் மாரிமுத்துவுக்கும் என்ன முன்விரோதம், என்ன பிரச்சனை என்றால் எனது மச்சான் மாரிமுத்து இறப்பதற்கு முன்பு எதிரி மரியசிலுவை என்பவரின் மகன் யேசுராஜாவையும்

எதிரி அந்தோணிராஜையும் எனது மச்சான் மாரிமுத்து வேலை செய்த துரையப்பா செங்கல் சேம்பரில் வேலைக்கு கூட்டி சென்றார். அங்கு சம்பளத்தில் ரூ.50/– கமிஷன் அடித்துவிட்டான் என்று அவர்களுக்குள் ரூ.50/– பிரச்சனையில் வாக்குவாதம் ஏற்பட்டு எனது மச்சான் மாரிமுத்து மாரிமுத்துவை எதிரிகள் யேசுராஜா, அந்தோணிராஜ், ஞானசேகர், குணசேகர் ஆகியோர்கள் அடித்து விட்டார்கள். அவர்கள் அடித்ததால் தப்பிக்க வழியில்லாமல் எனது மச்சான் மாரிமுத்து கையிலிருந்த அரிவாளால் யேசுராஜாவை வெட்டிவிட்டார். அதனால் பழிக்குப்பழியாக அந்த பிரச்சனை நடந்து அன்றையதினம் சாயங்காலம் எதிரிகள் எல்லோரும் என் வீட்டிற்கும், எனது மச்சான் மாரிமுத்து கட்டிய வீட்டிற்கும் வந்து வீட்டையும் பொருட்களையும் சேதப்படுத்தி 10 பவுன் நகையை எடுத்துசென்றுவிட்டார்கள். அந்த வழக்கில் என் கணவரையும், என் மாமனார் பிச்சையையும் பொய்யாக வழக்கில் சேர்த்து விட்டார்கள். இதுசம்மந்தமாக இருவர்கள் மீதும் வழக்கு பதிவு செய்து அந்த வழக்குகள் ஸ்ரீவைகுண்டம் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது. அதுதான் எங்களுக்குள் பிரச்சனை. அதன்பிறகு சில நாள் கழித்து எனது மச்சான் மாரிமுத்து இறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக அதுதான் எங்கள் இருவர் குடும்பத்திற்கும் உள்ள முன்பகை ஆகும். சந்தியாப்பர், ஞானசேகர், அருள்ராஜ், குணசிங், மரியசிலுவை, ஆகியோர்கள் எனது மச்சான் மாரிமுத்து, மச்சான் மனைவியும், என் அத்தை வீட்டிற்கு சென்று உன் புருஷனை சத்தம் போட்டுவை, நாங்கள் பெரிய குடும்பத்தை சேர்ந்தவர்கள், எங்களை வெட்டி அவமானப்படுத்தி விட்டான், வெளியே தலைகாட்ட முடியவில்லை. இல்லாவிட்டால் அவனை வெட்டி கொலை செய்துவிடுவோம் என்று மிரட்டியுள்ளார்கள். அதை என் மச்சானின் மனைவி என் அத்தையிடம் சொல்லவே என் அத்தை மரிய சிலுவையிடம் நான் என் பிள்ளையை சத்தம் போடுகிறேன் என்று பிரச்சனையை இதோடு விடுங்கள் என்று சொல்லியுள்ளார்கள். ஆனால் அவர்கள் அந்த பிரச்சனையை விடவில்லை, நாங்கள் உறவினர்கள்தானே இவர்கள் அப்படியா வெட்டிவிடுவார்கள் என்று சும்மா இருந்துவிட்டோம். வஞ்சகமாக மனதில் வைத்துக்கொண்டு 29.04.2019 அன்று சாயங்காலம் 6.00 மணியளவில் எனது மச்சான் மாரிமுத்துவும், அக்கா முத்துலெட்சுமியும் என் அத்தை வீட்டிற்கு வந்துள்ளார்கள். வந்தவர்கள் சுமார் 1 மணிநேரம் என் அத்தை வீட்டில் இருந்துள்ளார்கள். கொஞ்சம் குழம்பு தாருங்கள் என்று கேட்டு குழம்பை வாங்கிவிட்டு, அதன்பின்னர் சுமார் 7.30 மணியளவில் எனது மச்சான் மாரிமுத்து எனது அக்கா முத்துலெட்சுமி, என் அத்தை ஜெயா ஆகியோர்கள் என் மச்சான் வீட்டிற்கு செல்வதாக சொல்லிவிட்டு, இரவு சுமார் 7.30 மணியளவில் அப்பொழுது நடுத்தெருவில் பாஸ்கர் என்பவரின் வீட்டிற்கு அருகே வந்தபோது ஆஜர்

எதிரிகளும் மற்ற எதிரியும் சேர்த்து 6 பேரும் அரிவாளுடன் மற்ற எதிரிகளும் வந்து எனது மச்சான் மாரிமுத்துவை வழிமறித்துள்ளார்கள். எதிரி சந்தியாப்பன் இந்த புண்டா மவனை வெட்டிக்கொல்லுங்கள் இவன்தான் நம்மளை வெட்டி வெளியே தலைகாட்ட முடியாமல் வைத்தவன் என்று கூறியவுடன் எதிரி அருள்ராஜ் கையில் வைத்திருந்த அரிவாளால் என் எனது மச்சான் மாரிமுத்து தலையில் வெட்டவும், எனது மச்சான் மாரிமுத்து தலையை சாய்க்கவும், அந்த வெட்டு எனது மச்சான் மாரிமுத்துவின் வலது காதிற்கு கீழே வெட்டுப்பட்டு ஆழமான வெட்டுக்காயம் ஏற்பட்டுள்ளது. எதிரி அந்தோணிராஜ் வைத்திருந்த கோழிவால் அரிவாளால் எனது மச்சான் மாரிமுத்து தாடையில் வெட்டியபோது தாடைக்கு கீழ் பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டுள்ளது. உயிர்தப்பிக்க என் மச்சான் ஓடும்போது பக்கத்தில் இருந்த மற்ற எதிரிகள் 4 பேரும் மச்சானை பிடித்து கீழே தள்ளிவிட்டார்கள். பாஸ்கர் வீட்டுக்கு அருகே உள்ள சந்தில் விழுந்துவிட்டார். பக்கத்தில் இருந்த ஞானசெல்வி, லிங்கேஷ், சரவணன் ஆகியோர்கள் மாரிமுத்துவை வெட்டுகிறார்கள் என்று சத்தம் போடும்போது அந்த சத்தத்தை கேட்டு நானும், எனது கணவரும் வீட்டிலிருந்து சம்பவ இடத்திற்கு வந்தோம். எனது மச்சான் மாரிமுத்து பயந்து உயிர்பயத்தில் ஓடியபோது எதிரி ஞானசேகர், குணசேகர், சந்தியப்பர், மரியசெல்வம் ஆகியோர் கீழே மிதித்து பிடித்து குப்புற தள்ளியதில் எனது மச்சான் மாரிமுத்து இரத்தவெள்ளத்தில் கீழே விழுந்து தலை கிழக்காகவும், கால் மேற்காகவும் இறந்துகிடந்தார். நாங்கள் வந்து பார்க்கும் இரத்தவெள்ளத்தில் சந்து அருகே இறந்துகிடந்தார். நாங்கள் எல்லோரும் அழுதோம். அந்த இடமே போர்க்களம் போல் காணப்பட்டது. சின்னபிள்ளைகள் விளையாடி கொண்டிருந்தவர்கள் அலறி அடித்து ஓடினார்கள். எதிரிகள் அனைவரும் கிழக்கு பார்த்து ஓடிவிட்டார்கள். பிறகு சுமார் 8.45 முதல் 9.00 மணிக்கு மேல் எனது கணவர், எனது அக்கா முத்துலெட்சுமி, எனது மாமனார் பிச்சை ஆகியோர்களும் சேர்ந்து ஆழ்வார்திருநகரி காவல்நிலையம் சென்று நடந்த சம்பவத்திற்கு புகார்மனு கொடுக்க சென்றார்கள். என் மச்சான் சம்பவத்தின்போது சந்தனகலர் முழுக்கை சட்டையும், வெள்ளை கலர் புளு கலர்கட்டம்போட்ட சாரமும் அணிந்திருந்தார், அவைகளிலும் இரத்தக்கறை படிந்திருந்தது. அவைகள் நீதிமன்றத்தில் காண்பித்தால் அடையாளம் காட்ட முடியும். மேற்படி சான்றுபொருட்கள் ஸ்ரீவைகுண்டம் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தவை திடீர் வெள்ளத்தில் சேதமடைந்துவிட்டதால் நீதிமன்றத்தில் காண்பிக்க முடியவில்லை. இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிகளில் குணசிங் இன்று ஆஜராகவில்லை, மற்றொரு எதிரி சிலுவை என்பவர் இறந்துபோய்விட்டார். அதன்பிறகு சம்பவ

இடத்திற்கு போலீசார் வந்தபோது என் மச்சானின் உடலை அடையாளம் காட்டினோம். இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்குவிசாரணை நீதிமன்ற நேரமின்மை காரணமாக குறுக்குவிசாரணை defer செய்யப்படுகிறது.